# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

தரம் : 10

**விவசாயமும் உணவுத் தொழில் நுட்பமும்- I**

කෘෂි හා ආහාර තාක්ෂණය - I

நேரம்: 1 மணித்தியாலம்

**அறிவுறுத்தல்கள்**

- ♦ எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.
- ♦ ஒவ்வொரு வினாவிற்கும் தரப்பட்டுள்ள மிகப் பொருத்தமான இலக்கத்திற்கு புள்ளடியினை (X) இடுக.

1. இலங்கையின் முதலாவது பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட நீர்த்தேக்கமானது
   1) விக்டோரியா நீர்த்தேக்கம்　　2) உடவலவ நீர்த் தெக்கம்
   3) சேனாநாயக்க சமுத்திரம்　　4) உல்ஹிட்டிய நீர்த்தேக்கம்

2. தன்னிறைவுப் பொருளாதாரம், வர்த்தகப் பொருளாதாரமாக மாற்றமடைந்ததால் இலங்கையின் பிரதான பயிர்களாகஅறிமுகப்படுத்தப்பட்டவை
   1) நெல், மிளகு, தேயிலை　　2) தேயிலை, தென்னை, இரப்பர், கோப்பி
   3) கருவா, தென்னை, பாக்கு　　4) கொக்கோ, மிளகு, சாதிக்கா

3. நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் விவசாயத்தின் பங்களிப்பல்லாத காரணி
   1) வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபடுத்தல்
   2) நிலப் பயன்பாடு அதிகரித்தல்
   3) உணவுக் காப்பு அதிகரித்தல்
   4) தேசிய மொத்த உற்பத்தியை அதிகரித்தல்

4. தலாவக்கலை நரகத்தில் விவசாயத்திற்குள்ள முக்கியத்துவம் எது?
   1) விதை உருவளைக் கிழங்கு ஆராய்ச்சி நிலையம் அமைந்திருப்பது
   2) இறப்பர் ஆராய்ச்சி நிலையம் அமைந்திருப்பது
   3) தேயிலை ஆராய்ச்சி நிலையம் அமைந்திருப்பது
   4) நெல் ஆராய்ச்சி நிலையம் அமைந்திருப்பது

5. வருடாந்த மழைவீழ்ச்சி அளவும், மழைவீழ்ச்சிப் பரம்பல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இலங்கை பிரிக்கப்பட்டுள்ள கால நிலை வலயங்களாவன.
   1) மேல் நாட்டு ஈர, தாழ் நாட்டு ஈர, தாழ் நாட்டு உலர்
   2) ஈர வலயம், உலர் வலயம், இடை வலயம்
   3) ஈரவலயம், உலர் வலயம், வரண்ட வலயம்
   4) உலர் வலயம், இடை வரண்ட வலயம், ஈரவலயம்

6. வளியில் உலர்த்தப்பட்ட மண் மாதிரி ஒன்று 0.2mm தளையுடைய அரிக்கும்தட்டால் அரிக்கப்பட்டது. அரிக்கும் தட்டின் மேற்பகுதியில் எஞ்சுவது
   1) பெருமணல், மென் மணல்　　2) பரல், மென் மணல்
   3) பரல், பெருமணல்　　4) அடையல், மெண் மணல்

7. தாவரங்களில் ஒளித்தொகுப்பு செயற்பாட்டிற்கு தேவையானவற்றுள் சூரிய ஒளி தவிர்ந்த ஏனையவை
   1) நீர் காபனீரொட்சைட்டு, பச்சையம்　　2) ஒட்சிசன், நைதரசன், பச்சையம்
   3) ஒட்சிசன், நீராவி, பச்சையம்　　4) நீர், நைதரசன், பச்சையம்

8. நிழல் விரும்பும் தாவரம் ஒன்று
   1) சோளம்　　2) மிளகாய்　　3) கரும்பு　　4) அந்தூரியம்

9 இலங்கையின் பயிர்ச் செய்கை போகம், அப்போகத்திற்கு மழையைப் பெற்றுத் தரும் பருவக் காற்றுக்கள் மழை கிடைக்கும் மாதங்கள் என்பனவற்றைச் சரியாகக் காட்டும் விடையானது

| | போகம் | பருவக் காற்று | மழை கிடைக்கும் மாதங்கள் |
|---|---|---|---|
| 1) | சிறுபோகம் | தென்மேற்கு | நொவம்பர் முதல் ஏப்ரல் வரை |
| 2) | சிறு போகம் | வடகிழக்கு | மே முதல் செப்டெம்பர் வரை |
| 3) | பெரும் போகம் | தென் மேற்கு | மார்ச முதல் ஆகஸ்ட் வரை |
| 4) | பெரும் போகம் | வடகிழக்கு | டிசம்பர் முதல் பெப்ரவரி வரை |

10. மண் மாதிரி ஒன்றை கண்ணாடி முகவையில் இட்டு நீருடன் கலக்கி அடைய விட்டால் நீருடன் அதிக நேரம் தொங்களாக காணப்படுவது

1) களி 2) மென்மணல் 3) அடையல் 4) பெருமணல்

11. பூமரம் நடப்பட்ட சாடியொன்றுக்கு நீரூற்றி சிறிது நேரத்தின்பின்னர் சாடி நிரம்பி வழிந்ததுடன் சாடியின் அடிப்பகுதியிலுள்ள துளைகளாலும் நீர் வெளியேறுவது அவதானிக்கப்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் சாடியினுள் உள்ள மண்ணில் இருக்கக்கூடிய மண் வகையானது

1) மயிர்துளை நீரும் பருகு நீரும் 2) பருகு நீர் மாத்திரம்
3) மயிர்த்துளை நீரும் ஈர்ப்பு நீரும், பருகு நீரும் 4) ஈர்ப்பு நீர் மாத்திரம்

12. எளிய மழைமானியொன்றால் மழைய அளவிட்ட மாணவர்க் குழுவானது வருட இருதியில் வாசிப்புக்களின் மொத்தம் 2610mm என கணித்தறிந்தனர். இப்பாடசாலை உரித்தாகும் காலநிலை வலயமானது

1) ஈரவலயம் 2) உலர் வலயம் 3) இடை வலயம் 4) வரண்ட வலையம்

13. மண் அரிப்பு அதிகமாக நிகழ்வதற்கு வாய்ப்பிருப்பது பின்வரும் எத்தகைய காலநிலையும் தரை அமைப்பு இயல்புகளும் உள்ள காணிகளில்

1) குறைந்த மழை வீழ்ச்சியும் சிறிதளவு சாய்வும் கொண்ட காணி
2) அதிக மழை வீழ்ச்சியும் சிறிதளவு சாய்வும் கொண்ட காணி
3) அதிக மழை வீழ்ச்சியும் அதிக சாய்வும் கொண்ட காணி
4) குறைந்த மழை வீழ்ச்சியும் அதிக சாய்வும் கொண்ட காணி


14. மண் கற்றயன் மாற்றீட்டு கொள்ளளவை அதிகரிப்பதில் பங்களிப்புச் செய்யும் மண்ணின் கூறானது

1) அடையலும் களியும் 2) களியும் இருவாட்டியும்
3) அடையலும் மென்மணலும் 4) அடையலும் இருவாட்டி மண்ணும்

15. சில பயிர்கள் தனி நடுகைக் குழியில் நடுவதற்கு சிபாரிசு பண்ணப்படுவதோடு நடுகைக் குழியின் அளவானது பயிர் வகையைப் பொருத்து வேறுபடும். வாழை நடுகைக்கு சிபாரிசு செய்யப்படும் நடுகைக் குறியின் அளவு cm ல்

1) 90x90x90 2) 60x60x60 3) 30x30x30 4) 15x15x15

16. மரக்கறி வித்துக்களை நடுவதற்காக தயார் செய்த அருகருகே அமைந்துள்ள இரு நியம பாத்திகளின் குருக்குவெட்டுமுகத்தை கீழே படத்தில் காட்டப்பட்டுள்ளது.




A, B என்பவற்றின் சிபாரிசு செய்யப்பட்ட அளவுகளை முறையே cm களில்,

1) 50cm உம் 25cm உம் 2) 80cm உம் 40cm உம்
3) 100cm உம் 30 cm உம் 4) 125cm உம் 50cm உம்

17. விஞ்ஞான ரீதியான பயிர் வகைப்படுத்தலை முன்வைத்த சுவீடன் நாட்டு விஞ்ஞானி

1) ஹிமோகிரடஸ் 2) பைதகரஸ்
3) ஆகிமீடிஸ் 4) கரோலஸ் லீனியஸ்

18. தாவர வளர்ச்சி கோலத்துக்கு அமைவான பயிர் வகைப்படுத்தலை தெரிவு செய்க
    1) அகன்ற இலை, புதர், மரம்
    2) செடி, புதர், மரம்
    3) மெல்லிய நீண்ட இலை, அகன்ற இலை, புதர்
    4) கொடி, புதர், மரம்

19. நெற் பயிரின் தாவர வியற் பெயரை சரியாகக் காட்டுவது,
    1) *Oryza sativa L*
    2) *oryza sativa*
    3) *Oryza Sativa L*
    4) *Oryza Sativa*

20. பயிர்களின் வாழ்க்கை வட்டத்தை பூரணப்படுத்த எடுக்கும் காலம் பயிர் வகைப்படுத்தலில் எடுக்கப்படும் நியதி ஒன்றாகும். அதன்படி ஓராண்டுப் பயிர்கள் அடங்கிய விடையானது
    1) சோயா அவரை, நெல், மிளகாய், மிளகு
    2) வெற்றிலை, கத்தரி, கெக்கரி, பாகல்
    3) கோவா, தக்காளி, பயிற்றங்காய், கறுவா
    4) சோளம், பயறு, வெண்டி, நெல்

21. நாற்று மேடை ஊடகக் கலவைக்காக எடுக்கப்படும் மேல் மண், சேதனப் பசளை என்பவற்றின் விகிதமானது
    1) 1:1
    2) 2:1
    3) 1:2
    4) 3:1

22. மேல் நாட்டு ஈரவலயத்தில் தேயிலை செய்கை மேற்கொள்ள முடியத நிலங்களில் பயிர்ச் செய்கை பண்ணக்கூடிய புணர்வாழ்வு பயிர் ஒன்றானது
    1) கோதமாலா
    2) முருங்கை
    3) வட்டக்காய்
    4) கெலபகோனியா

23. குளிர் காலநிலையுள்ள மலை நாட்டு பிரதேசத்தில் போன்றே வெப்ப காலநிலையுள்ள யாழ்ப்பான பிரதேசத்திலும் உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வெற்றிகரமான விளைச்சலைப் பெறலாம். இவ் வெற்றிகர விளைச்சலுக்கு காரணம்
    1) குளிர்ச்சியான பகற்காலமும் வெப்பமான இரவுகாலமும்
    2) அதிக மழை வீழ்ச்சியும் அதிக சாரீரப்பதனும்
    3) அதிக காற்றுள்ள இரவும் குறைந்த வெப்பநிலையுள்ள இரவும்
    4) வெப்பமான பகற்காலமும், குளிர்ந்த இரவு காலமும்

24. நிலத்தின் பள்ளமான பகுதிகள் ஊடாக நீர் ஓடும்போது மண்ணரிப்பு ஏற்பட்டு சிறுசால்கள் உருவாகும். அவ்வாறான நிலங்களைத் திருத்தி பழைய நிலைக்கு கொண்டுவரத்தக்கதான மண்ணரிப்பு சந்தர்பப்ம் அழைக்கப்படுவது
    1) ஓடுகால் அரிமானம்
    2) சிதறலரிமானம்
    3) பரப்பரிமானம்
    4) நீரரிபள்ள அரிமானம்

25. சாடி நாற்று மேடைகளின் அடித் தளத்திற்கு செங்கற் துண்டு படையொன்று இடுவதால் எதிர்பார்ப்பது
    1) நீர்வடிப்பை விருத்தி செய்தல்
    2) வோமயிர்களின் வளர்ச்சியும் நாற்றும் உறுதியடைய
    3) பங்கசு நோய்களை தவிர்த்தலும் நீரிலுள்ள உப்புக்களை உறிஞ்சவும்
    4) வேர்கள் பரந்து வளர்தலும் நீரிலுள்ள உப்புக்கள் படியவும்

26. அவரை இன வித்துக்கள் நேரடியாக களத்தில் நடப்படும் இதற்கான காரணமாக அமைவது
    1) எல்லா அவரை இனவித்துக்களும் நன்கு முளைப்பதனால்
    2) அவரை இன வித்துக்கள் நாற்று மேடையில் நடுவதால் பெறப்படும் விளைச்சல் குறைவாதலால்
    3) அவரை இன நாற்றுக்கள் நாற்று மேடையில் பீடைத் தாக்கத்திற்குள்ளவாதால்
    4) அவரையினைப் பயிர்கள் பிடுங்கி நடும்போது ஏற்படும் தாக்கத்திற்கு அவை ஈடுகொடுக்காமை

27. நீர் வடிப்பு நலிவான நிலமொன்றில் பயிரிட நீங்கள் தெரியும் பயிரானது
    1) கொஹில
    2) பயறு
    3) தக்காளி
    4) மிளகாய்

28. பயிர்ச் செய்கைக்காக துளிமுறை நீர்ப்பாசன பாவனை தொடர்பான சரியான கூற்றைத் தெரிவு செய்க.
    1) துளிமுறைப் பாசனைத்திற்கு பெரிய நீர் முதலொன்று அவசியம்
    2) துளிமுறைப் பாசனத்திற்கு ஆரம்பச் செலவு அதிகம்
    3) வினைத் திறன் மிக்க பயனைப் பெறமுடிவது துளிமுறைப் பாசனத்தினாலாகும்
    4) துளிமுறை பாசனத்திற்கு குறைந்த தொழினுட்ப அறிவு போதுமானதாகும்

29. கலா ஓயாவை இடைமறித்து கலாவாவி நிருமாணக்கப்பட்டதுபோல் மல்வது ஓயாவை இடைமறித்து நிருமாணிக்கப்பட்ட குளம் எது?
    1) பசவக் குளம்
    2) நாச்சியாதீவு குளம்
    3) ஹுருளுவெவ
    4) மின்னேரியாக்குளம்

30. ஆற்றங்கரையை அண்டிய பிரதேசங்களின் பரவலாக காணக்கூடிய மண் கையானது
    1) செங்கபில மண்
    2) செம்மஞ்சள் பொட்சோல் மாண்
    3) அலூவியல் மண்
    4) களி இருவாட்டி மண்

31. தூவல் பாசனத்தின் அனுகூலமொன்றானது
    1) தாபிப்பதற்கான மூலதனச் செலவு குறைவு
    2) சாய்வான தரைகளுக்கு பொருத்தமானது
    3) உயரமாக வளரும் பயிர்களுக்கும் பயன்படுத்தலாம்
    4) காற்று அதிகமுள்ள பிரதேங்களுக்கும் பயன்படுத்தலாம்

32. குக்கர்பிற்றே ஈயின் தாக்கத்தினால் அதிகளவு பாதிக்கப்படும் தாவரக் குடும்வம்
    1) சொலனேசி குடும்பம்
    2) குக்கற்பிற்றே குடும்பம்
    3) பெபேசியே குடும்பம்
    4) பொஏசியே குடும்பம்

33. கற்களும் முட்களும் கொண்ட தரையைப் பண்படுத்த மிகப்பொருத்தமான கலப்வைகையானது
    1) வட்டத்தட்டுக்கலப்பை
    2) சுழல் கலப்பை
    3) ஜப்பானிய சூழல் களைகட்டும் கருவி
    4) முட்கலப்பை

34. வித்தில் அதிகளவு புரதத்தை உள்ளடக்கியதும், வளிமண்டல நைதரசனை பெற்றுக்கொள்ளும் இயல்பும் கொண்ட தவாரக் குடும்பமானது
    1) சொலனேசியே குடும்பம்
    2) ருடேசியே குடும்பம்
    3) மல்வேசியே குடும்பம்
    4) பபேசியே குடும்பம்

35. நாற்றை வன்மைப் படுத்தும் செயற்றொடரின்போது <u>செய்யக்கூடாத</u> செயல் ஒன்றானது
    1) நீர்ப் பாய்ச்சும் தடவைகளின் எண்ணிக்கையை குறைத்தல்
    2) ஒளிக்கு திறந்திருப்பதை அதிகரித்தல்
    3) நீர்ப் பாய்ச்சும் கால இடைவெளியை அதிகரித்தல்
    4) N அடங்கும் பசளைகளை அதிகமாக பிரயோகித்தல்

36. நாற்றுமேடைக்கு நிழல் வழங்கும்போது நாற்மேடையிலிருந்து எவ்வுயரத்தில் நிழல் வழங்கப் படவேண்டும்.
    1) 60cm
    2) 30cm
    3) 15cm
    4) 45 cm

37. குறுகிய கால தாவரக் குடும்பத்துக்குரிய பயிர்க்கூட்டம் அடங்கிய விடையானது,
    1) கரும்பு, பீட், கரட், ராபு
    2) கரும்பு, கோபி, பயறு, புகையிலை
    3) மிளகாய், கௌபி, போஞ்சி, தக்காளி
    4) ஸ்டோபரி, வெங்காயம் உருளைக் கிழங்கு, கரும்பு

38. மண்ணின் பௌதிக, இரசயான, உயிரியல் பண்புகள் நலிவடைவதால் மண்ணின் பயிர் உற்பத்தித் திறன் குன்றுதல் எவ்வாறு அழைக்கப்படும்?
    1) மண் அமிலத் தன்மை என
    2) மண் காரத்தன்மை என
    3) மண் வளங்குன்றல் என
    4) இவை எதுவுமல்ல

39. பாத்திப் பாசன (Basin Irrigation) முறை மிகப் பொருத்தமானது எத்தாவரக் கூட்டத்திற்கு
    1) வாழை, நெல், தென்னை, இறப்பா
    2) நெல், தென்னை, திராட்சை, வல்லாரை
    3) கங்குன், வல்லாரை, கொகில, வெண்டி
    4) மா, வாழை, ஆனைக் கொய்யா, திராட்சை

40. WU குறியீட்டால் குறிப்பிடப்படும் விவசாயக் காலநிலை வலயம் எது?
    1) தாழ் நாட்டு ஈரவலயம்
    2) மத்திய நாட்டு ஈரவலயம்
    3) மேல்நாட்டு ஈரவலயம்
    4) மேல் நாட்டு இடைவலயம்

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

தரம் : 10

**விவசாயமும் உணவுத் தொழில் நுட்பமும்- II**
කෘෂි හා ආහාර තාක්ෂණය - II


நேரம்: 2 மணித்தியாலம்

**அறிவுறுத்தல்:**

- **முதலாம் வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கப்பட வேண்டும். ஏனைய வினாக்களுள் நான்கினை தெரிவு செய்து விடையளிக்க.**
- **முதலாம் வினாக்கு 20 புள்ளிகளும் ஏனைய வினாக்களுக்கு 10 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்**

---

1. பயிர்ச் செய்கை போகக் கூட்டத்தில் கமநல உத்தியோத்தர், நிலப் பண்படுத்தலுக்கான உபரகண பயன்பாடு, நடுகைப் பொருட்கள் பயன்பாடு அறுவடைக்குப் பின்னரான செயற்பாடுகள் என்பனவற்றை சிறப்பாக மேற்கொள்ளவதால் உயர் அறுவடையை பெறமுடியும் என விளிக்களமளித்தார்
   i) பயிர்ச் செய்கை நிலத்தில் மேற்கொள்ளப்படும் ஆரம்பப் பண்படுத்தலின் இரு படிகளையும் தருக.



   ii) a). படத்திலுள்ள உபகரணம் யாது?
   b) அவ்வுபகரணத்தை இணைக்கும் இயந்திரம் எது?
   iii) இடைப் பண்படுத்தல் என்பதால் கருதப்படுவது யாது?
   iv) நிலப் பண்படுத்தலால் மண்ணில் விருத்தியடையும் பௌதிக நிலைமைகள் இரண்டு தருக.
   v) a) நடுகைப் பொருள்களைப் பெற்றுக்கொள்ள பயன்படுத்தும் நாற்று மேடை (பாத்தி) வகை இரண்டு தருக.
   b) மேலே கூறப்பட்ட பாத்தி வகைகளில் ஈரவலயத்திற்கு மிகப் பொருத்தமான பாத்தி வகை எது?
   vi) a) நாற்று மேடைகளை தொற்று நீக்கஞ் செய்யக்கூடிய சூழல் நேயமான முறை ஒன்றை தருக.
   b) நாற்று மேடைகளை தொற்று நீக்குவதன் நோக்கம் ஒன்றைத் தருக.
   vii) பயிரொன்றைத் தாபிக்கும்போது சரியான ஆழத்தையும் இடைவெளியையும் பேணாவிட்டால் ஏற்படக்கூடிய பிரதிகூலங்கள் இரண்டு தருக.
   viii) மண்ணிலிருந்து நீர் வெளியேறும் இரு வழிகளைத் தருக.
   ix) பயிர்களுக்க மூடுபடை இடுதலின் அனுகூலங்கள் இரண்டு தருக.
   x) மண்ணீர் காப்பு முறைகள் இரண்டு தருக.

2. பண்டைய அரச காலத்தில் இலங்கை அரிசியால் தன்னிறைவு பெற்றிருந்தமைக்கு பிரதான காரணம் நீர்ப்பாசன தொழினுட்பம் என கண்டறியப்பட்டுள்ளது.
   i) a) இராஜரட்டை குளத் தொகுதிகளில் ஒரு குளத்தால் போசிக்கப்படும் பிரதேசமானது அதற்கு கீழாக அமைந்துள்ள பிரதேசத்தை போசிக்கும் விதமாக அமையுமாறு அமைக்கப்பட்டது. இது எவ்வாறு அழைக்கப்படும்.
   b) அனுராதபுர யுகத்தில் முதலாவதாக நிருமாணிக்கப்பட்ட குளம் எது?


   c) கலாவாவியில் இருந்து திசாவாவிக்கு நீரைக் கொண்டு செல்வதற்காக ஜயகங்கை (யோதஅல)யை நிருமாணித்த மன்னன் யார்?

ii) குளமொன்றின் பிரதான பாகங்கள் இரண்டைக் குறிப்பிட்டு அதன் முக்கியத்துவத்தை சுருக்கமாக தருக.


iii) பண்டைய காலத்தில் இலங்கையில் விவசாயம் நிலவியமைக்கான சான்றுகள் 3ஐ சுருக்கமாக விளக்குக.

3. குறித்த பிரதேசமொன்றுக்கு பொருத்தமான பயிர்களைத் தெரிவு செய்யவும் பயிர் விளைச்சலின் அளவை அதிகரிக்கவும் அறுவடைக்குப் பின்னரான இழப்பை இழிவாககவும் வானிலை, காலநிலை ஆகியன பற்றி அறிந்திருப்பது அவசியம்


i) கீழே A, B, C ஆகிய படங்களால் காலநிலைப் பரமாணங்களை அளக்கும் உபகரணங்கள் 3 காட்டப்பட்டுள்ளன.



A




B



C

   a) உபகரணங்கள் A, B, C ஐப் பெயரிடுக.

   b) இங்குள்ள உபகரணம் A ஐ நிறுவுவதற்கு இடம் ஒன்றைத் தெரிவு செய்யும்போது கவனத்தில்கொள்ள வேண்டிய காரணங்கள் இரண்டைத் தருக.

ii) a) சூழல் வெப்பநிலை அதிகரிப்பதற்கு காரணமான மனித செயற்பாடுகள் 2 தருக.

   b) ஒளிக்கால தூண்டற் பேறு என்பதை சுருக்கமான விளக்குக.

iii) பயிர்ச் செய்கையில் சாரீரப்பதனின் பாதகமான செல்வாக்கு இரண்டு தருக.

4. பயிர்ச் செய்கையின் ஊடகமாக அமைவது மண்ணாகும் வளமான மண்ணின் தன்மைகளும் மண்ணின் முக்கியத்துவமும் அதற்குக் காரணமாகும்.

i) மண் உருவாவதற்கு அடிப்படையான பாறைகள் எவை?

ii) a) மண் இரசாயன வானிலையாலழிதலில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் இரண்டு தருக.

   b) பயிர்ச் செய்கையில் மண்ணின் முக்கியத்துவம் இரண்டு தருக.

5. நடுகை பொருட்களை பயிர்ச் செய்கை நிலத்தில் தாபித்தல் பயிர் தாபித்தல் எனப்படும்.

i) a) பயிர் தாபிக்கும் பிரதான முறைகள் எவை?

   b) இருவரிசையில் நடுகை செய்யப்படும் பயிர் ஒன்றைக் குறிப்பிடுக.

ii) எழுமாற்றாக வீசி விதைக்கும் பயிர் இரண்டு குறிப்பிடுக.

iii) a) பயிர்களைத் தாபிக்க இயந்திரங்களைப் பயன்படுத்துவதால் உள்ள அனுகூலங்கள் 2 தருக.

   b) இயந்திர வலுவால் இயக்கப்படும் நிலப் பண்படுத்தல் பயன்பாட்டின் அனுகூலங்கள் 3 தருக.

6. நிலைபேறான அபிவிருத்தி பாடசாலைகள் வேலைத் திட்டத்தின் கீழ் பாடசாலைகளில் நாற்று மேடைகளை ஏற்படுத்தி மிக சிறப்பான சூழலை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

i) மரக்கறி பயிர்கள் தவிர்ந்த பாடசாலை வீட்டுத் தோட்டத்தில் பயிரிடக்கூடிய உணவுப் பயிர்கள் 4 தருக.

ii) நாற்று மேடை ஒன்றிற்கு பொருத்தமான இடத்தை தெரிவு செய்யும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் இரண்டு தருக.

iii) a) வேர்த் தொகுதிக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் களத்தில் நடுவதற்க நாற்றுக்களை பெறக்கூடிய வகையில் தயார் செய்யக்கூடிய நாற்று மேடைகள் இரண்டு தருக.

b) சாடி நாற்று மேடையாக பயன்படுத்தக்கூடிய சாடி வகைகள் 4 தருக.

c) நாற்று மேடை ஊடகக் கலவையின் ஈரலிப்பு நிலைமையை பரிசோதிக்கும் முறையொன்றை சுருக்கமாகத் தருக.

7. உவர்வலய விவசாயி ஒருவர் நீர்ப்பாசன முறை, நீர் காப்பு முறைகள் என்பவற்றை பின்பற்றி பயிர்ச்செய்கையை ஆரம்பித்தார்.

i) பயிர்ச்செய்கையில் நீரின் முக்கியத்துவம் 4 தருக.

ii) a) சிறந்த நீர் வடிப்பின் அனுகூலம் இரண்டு தருக.

b) பயிர்களுக்கு நீர்ப்பாசன முறை ஒன்றை தெரிவு செய்கையில் அவர் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் இரண்டு தருக.

iii) a) மேற்பரப்பு நீர்ப்பாசன முறை 2 தருக.

b) மழை நீரை சேகரிப்பதன் அனுகூலங்கள் இரண்டு தருக.